# நீங்களும் முயன்று பார்க்கலாம்!




எங்கள் நிறுவனத்தில் நான் ஆரம்ப வருடங்களில் இருந்தபோது என்னுடைய வேலை ஆர்வம் மற்றும் சிந்தனைப் போக்கு, தன்னுடைய அலைவரிசையோடு ஒத்துப்போயிருப்பதாக உணர்ந்திருந்த, எங்கள் துணைப் பொது மேலாளர் டெக்னிகல் உதவியாளர் என்று ஒரு புதுப்பதவியை உண்டாக்கி, என்னைத் தன்னுடைய அண்மையில் வைத்துக் கொண்டார்.



அந்தப் பதவி சோதனையான ஒன்று. கணினி உபயோகம் பிரபலமாகாத நாட்கள் அவை. வெறும் பத்து நிமிடங்கள் மட்டுமே உணவு இடைவேளையாக எடுத்துக் கொண்டு, தினமும் பதிமூன்று மணிநேரம் கொட்டாவி கூட விடாமல் வேலை செய்யும் அவருடைய வேகத்துக்கு ஈடு கொடுத்து, நிறுவனத்தின் எந்த மூலையில் அந்தக் கணத்தில் என்ன

## ...த்தான் ஜெயித்தேன்! நான் இப்படி...



நடந்து கொண்டிருக்கிறது என்று, அவருக்கு அறிவித்தபடி இருப்பதென்பது என்னுடைய திறமைக்குச் சவாலாக இருக்கும்.

மற்ற துறைகளிலும் அவை சார்ந்த அலுவலகங்களிலும் என்னுடைய தொடர்பினை நட்புபூர்வமாக ஏற்படுத்திக் கொண்டு, அங்குள்ளோர் மூலமாகத்தான் பல செய்திகளையம், புள்ளி விவரங்களையும் திரட்ட வேண்டும்.

மற்ற எல்லோருடனும் என்னால் சுமுகமாக நடந்து கொள்ள முடிந்தாலும், ஒரே ஒரு துறையின் பொறுப்பாளருக்கு மட்டும் என்னைக் கண்டால் ஏனோ பிடிக்காது. பதவி வகையில் நான் E-1

## பெ. நாயகி

என்றால் அவர் E-4. நான் அந்த நிலையை அடைய பனிரெண்டு வருடங்கள் ஆகும். அந்த அளவுக்கு சீனியர். இவருக்கு மட்டும் என்னைக் கண்டாலே ஏதோ ஆகிவிடும். நான் ஏதும் கேட்கவே வேண்டாம். என் தலையைக் கண்ட மாத்திரத்திலேயே காச்மூச்சென்று கத்த ஆரம்பித்துவிடுவார். எனக்கு எந்த வித புள்ளி விவரமும் கொடுக்கக் கூடாது என்று தன்




துறையினருக்கு வாய்மொழி உத்தரவு கள் போடுவார்.

"நீ என்ன நினைத்துக் சொண் டிருக்கிறாய் உன்னைப் பற்றி? உன் பாஸ் பெரிய ஆள் என்றால் நீ அவருடைய நிழலிலேயே இருப்பதனா லேயே, உன்னையும் பெரிய ஆள் என்று அலட்டிக்காதே. சப்பரத்தில் போகும் பகவானுக்குப் போடும் பூமாலையில் சில இதழ்கள், அதன் கீழே நிழலுக்கு ஒதுங்கியபடி பம்மிச் செல்லும் நாயின் மீதும் விழும். நாய் நினைத்துக் கொள்ளக்கூடாது அது தனக்காக செய்யப்படும் பூஜை என்று'' என்றெல்லாம் தரக்குறை வாகப் பேசி, என்னை மனம் நோகச் செய்வதில் அவருக்கு என்னவோ சந்தோஷம்.

அவருக்குத் தமிழர்களைக் கண் டால் பிடிக்காது என்பதும், என் னுடைய பாஸ் அவருடைய பதவி உயர்வுக்கு ஒருமுறை முட்டுக்கட்டை போட்டவர் என்பதும், ஒன்று சேர்ந்து காழ்ப்புணர்வுக்கு நான் பலியாகிக் கொண்டிருந்தேன்.

எவ்வளவுதான் எனக்குள் ஆறுதல் சொல்லிக் கொண்டாலும், என் மனம் புண்படுவதையோ, என் உற்சாகம் சுத்தமாக வடிந்து போவ தையோ தவிர்க்கவே முடிந்ததில்லை.

எல்லா சகிப்புத் தன்மைக்கும் ஒரு Breaking Point இருக்கிறதல்லவா? ஒருமுறை அந்தத் துறையில் இருந்து ஒரு புள்ளி விவரம் தேவைப்பட்ட போது, என்னுடைய பாஸ் என்னை அந்த வேலைக்குப் பணிக்க, நான் அவரிடம் உடைந்து வெடித்துவிட் டேன். ''அவர் அந்தத் துறையின்



**வி**லங்குகளுக்குப் பின்னால் வருவதை முன் கூட்டியே அறியும் திறன் உண்டு. பனிமலைச் சரிவு என்றால் அதை 10 நிமிடங்களுக்கு முன்பே அறிந்து, யாக் எருமைகள் கத்திக் கொண்டே எதிர்திசையில் ஓடுமாம். எலிகள் மறைந்து

பொறுப்பாளராக இருக்கும்வரை என்னை அங்கே போகச்சொல்லா தீர்கள் சார். என்னைக் கேவலமாகப் பேசுகிறார். அவருடைய வயது கருதியும், அனுபவம் கருதியும் நான் எவ்வளவுதான் பொறுப்பது? அந்தத் துறையின் பக்கம் போய் வந்தால் இரண்டு நாட்களுக்கு என் மூடே சரியாக இருப்பதில்லை. தயவு செய்து

**விட்டால் பூகம்பம் ஏற்படும். பாம்புகள் வெயில் வேளையில் இலைகள் மீது ஓய்வெடுத்தாலும் எறும்புகள் முட்டையைத் தூக்கிச் சென்றாலும் மழை வரும். மண்மாரி பொழியப்போவதாக இருந்தால் ஒட்டகங்கள் ஆகாயம் பார்க்குமாம்.**

**தகவல்: கே.விஜயா**

மன்னியுங்கள்.'' என்று ஆரம்பித்து அவர் என்னைப் பேசிய அவ்வளவு வார்த்தைகளையும் என் பாஸிடம் கொட்டித் தீர்த்துவிட்டேன்.

அவர் புன்னகை மிகுந்த முகத்துடன் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு நான் பேசி முடித்தவுடன் கேட்டார். ''உனக்கு அவர் மீது இரக்கம் பிறக்கவில்லையா?''

நான் அதிர்ந்து போனேன்.

''என்ன சார் சொல்கிறீர்கள்? வார்த்தைகளை வாங்கிப் புண்ணாகிப் போயிருப்பது நான். அவர் மீது இரக்கம் இல்லையா என்று கேட்கிறீர்களே! நீங்கள் கேட்பதைப் பார்த்தால் என் மீது உங்களுக்கு இரக்கமே இல்லையா என்று உங்களைக் கேட்கத் தோன்றுகிறது'' என்றேன் சூடாக.

அவர் சிரித்தார்.

''ஆவேசம் அடங்கி கொஞ்சம் யோசித்துப் பார். உன்னுடைய வயது என்ன? உன்னுடைய அனுபவம் என்ன? அவ்ருடைய வயதுக்கும், அனுபவத்திற்கும் உன்னை எதிரியாக நினைக்கும் அளவுக்கும், உன்னைப் பார்த்துப் பார்த்துப் பொருமும் அளவுக்கும் அவர் இறங்கி வருகிறார் என்றால் எவ்வளவு பரிதாபமான நிலைமை அவருடையது? அவருடைய சம வயதுக்காரர்களுடன், தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு முதிர்ச்சி இல்லாததாலோ அல்லது அவர்களால் புறக்கணிக்கப் பட்டிருப்பதாலோ தானே, உன் அளவுக்கு இறங்கி சில்லறையாகப் போயிருக்கிறார்?

நினைத்துப்பார். இந்த முதிர்ச்சி உடையவர் வீட்டிலும் தன் வாரிசுகளிடம், தன் மரியாதையைத் தக்க வைத்துக்கொள்ள முடியாதவராக இருப்பார். எல்லோராலும் ஒதுக்கப் படுபவராக இருப்பார். வாழ்க்கையின்

மீது நம்பிக்கையோ, பிடிப்போ இல்லாதவராக இருப்பார்.

இத்தகையவருடைய செயல்களை நீ இனிமேல் இந்தக் கோணத்தில் பார்க்க முயற்சி செய்யேன். அவர் பேச ஆரம்பித்தவுடன் அவர்மீது இரக்கம் கலந்த பார்வையுடன் ஒரு புன்னகையை வீசிப்பார். ஐயோ பாவம் என்று மனதுக்குள் சொல்லிப்பார். அடுத்த ஒரு வாரம் இந்த வித்தையை பிரயோகித்துப் பார்த்து விட்டு என்னிடம் சொல். அதன்பிறகு இவரை என்ன செய்வது என்று தீர்மானிக்கலாம்'' என்றார்.

அந்த அறிவுரை ஆயிரம் பொன் பெறும். அவர் மீது மட்டுமில்லை. அதன்பிறகு என் அலுவலக வாழ்க்கையிலும் சரி, சொந்த வாழ்க்கையிலும் சரி என் மனம் புண் படத்தக்கதாக, நான் கருதிய பல தருணங்களில் இந்த சூத்திரம் என்னை இலகுவாக்கி இருக்கிறது.

என் அருமை சிநேகிதிகளே! உங்களுடைய வாழ்க்கையிலும் பல சமயங்களில் மாமியார், மாமனார், நாத்தனார், மூத்த உறவினர்கள் போன்ற பெரியவர்களால் காரணமற்ற கண்டனக் கணைகளுக்கு ஆளாகும்போது, இந்த சூத்திரத்தினை உபயோகப்படுத்திப் பாருங்களேன்.

தனி வாழ்க்கையில் உங்களைக் காரணமின்றி அவர்கள் புண்படுத்தும் தருணங்கள் எல்லாமே, அவர்கள் எல்லோருக்கும் நல்லவனாக இருந்த அவர்கள் வீட்டுப்பிள்ளையை, மனைவி என்கிற பதவியை வைத்துத் தனதாக்கிக் கொண்டுவிட்டாளே, இவள் என்கிற காழ்ப்புணர்வின் வெளிப்பாடாகத்தான் இருக்கும். பெண்களை புகுந்த வீட்டில் அதிகமாகப் புண்படுத்தும் வாக்கிய அஸ்திரம்:

“அவன் முந்தி எல்லாம் இப்படிக் கிடையாது. நீ வந்தப்புறம் தான் சுத்தமா மாறிப்போனான்”.

அவர்கள் ஒப்புக்கொண்டாலும், ஒப்புக் கொள்ளாவிட்டாலும் இது தான் நிதர்சனம் என்கிற உண்மையை ஜீரணித்துக் கொண்டே ஆக வேண்டிய கட்டாயத்தை அவர்கள் உணரும் வரையில், நீங்கள்தான் கொஞ்சம் அவர்கள் மீது இரக்கம் காட்டிப் பாருங்களேன்.

எவ்வளவு பரிதாபத்துக்குரிய நிலையில் அவர்கள் இருந்தால் வயதிலும், அனுபவத்திலும் மிகவும் குறைந்த உங்களைப் போட்டியாக எண்ணி காழ்ப்புணர்வைக் கொட்ட வேண்டிய அளவுக்கு இறங்கி வந்திருப்பார்கள், என்கிற கருணையோடு அவர்கள் மீது உங்கள் பார்வையை வீசுங்கள். உங்கள் மனம் புண்படுவதில் இருந்து தப்புவதோடு, பெருந்தன்மையான சிந்தனையும் வளர்வதால், வாழ்வின் வண்ணமே மாறுகிறதா இல்லையா என்று பாருங்கள்.